



அந்நியத் தொழிலாளர்களை வேலைக்குச் சேர்ப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட்டு மீண்டும் அந்நியத் தொழிலாளர்களை உணவகத் தொழில்துறையினர் உட்பட இதர தொழில்துறையினரும் அவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கான

எம்.எஸ். மலையாண்டி

இந்தக் கட்டுரை பற்றிய தங்கள் கருத்துகளை அல்லது பதிவுகளை வாசகர்கள் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்.
malayandy1626@gmail.com

## அந்நியத் தொழிலாளர்கள் விவகாரம்

# நிபந்தனை தளருமா?





## தொழில்துறையினரின் எதிர்பார்ப்பு



உணவு, பானங்கள், தயாரிப்பு, உணவகம் உள்ளிட்ட இந்தியர் சார்ந்த பல்வேறு துறைகளில் ஆள்பலப் பற்றாக்குறை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதை பிரிமாஸ் எனப்படும் மலேசிய இந்தியர் உணவக உரிமையாளர்கள் சங்கத் தலைவர் டத்தோ ஜே. கோவிந்தசாமி என்ற சுரேஷ் சில தினங்களுக்கு முன்பு சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

ஆள்பலப் பற்றாக்குறையால் ஏற்கெனவே நாடு முழுவதும் பல

**★ ஆள்பலப் பற்றாக்குறை நாளுக்கு நாள் மோசமடைவதாக தொழில்துறையினர் மனக்குமுறல்**

**★ தொழிலாளர் பற்றாக்குறை நீடிப்பதால் உணவகங்களுக்கு அழுத்தம் அதிகரிக்கிறது**

**★ வேறுவழியில்லாமல் சட்டவிரோத அந்நியத்தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டிய கட்டாயம்**

உணவகங்களும் உணவுக் கடைகளும் மூடப்பட்டு விட்டதை ஏற்கெனவே இந்தச் சங்கம் சுட்டிக்காட்டி இருந்தது. இந்த நிலையில் ஆள்பலப் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சூழ்நிலையில் பல உணவகங்கள் தள்ளாடும் நிலையைச் சந்தித்துள்ளன.

ஆள்பலப் பற்றாக்குறை இப்படியே நீடித்தால் உணவகங்களை நடத்த முடியாத ஒரு காலகட்டம் வந்து விடும் என்பதையும் சுரேஷ் அரசாங்கத்தின் பார்வைக்கு சுட்டிக்காட்டி இருக்கின்றார். 2026 மலேசியாவுக்கு வருகை தரும் ஆண்டாகும். ஆகவே அரசாங்கம் இதைக் கருதி உணவகம் உள்ளிட்ட பல்வேறு தொழில்துறைகளில் நிலவும் ஆள்பலப் பற்றாக்குறைக்கு ஒரு சரியான தீர்வு காண வேண்டும் என பிரிமாஸ் மீண்டும் மீண்டும் கோரிக்கை வைத்திருக்கிறது.

ஆள்பலப் பற்றாக்குறை நீடிக்கும்பட்சத்தில் உணவகத் துறையினர் மிகுந்த அழுத்தத்தை எதிர்நோக்கி வருவதை அரசாங்கம் மிகக் கடுமையாகக் கருத வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தி இருக்கின்றார். சில தினங்களுக்கு முன்பு தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறார்.

### நிபந்தனை தளருமா?

ஆள்பலப் பற்றாக்குறைக்கு தீர்வு காண்பதற்கு அந்நியத் தொழிலாளர்களை நாட்டிற்குள் கொண்டு வரும் நடைமுறைகளை அரசாங்கம் மீண்டும் அறிமுகம் செய்ய வேண்டும் என்றும் பிரிமாஸ் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டது.

நிபந்தனைகளையாவது அரசாங்கம் தளர்த்த வேண்டும் என அந்தச் சங்கம் கோரிக்கை வைத்திருக்கிறது.

உணவகங்கள் உட்பட மற்ற தொழில்துறைகளும் இந்தக் கடுமையான காலகட்டத்தில் தொடர்ந்து செயல்படுவதற்கு அந்நியத் தொழிலாளர்களை வரவழைப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஏனெனில் உணவகங்களில் வேலை செய்ய உள்நாட்டுத் தொழிலாளர்களைக் கவரும் அனைத்து முயற்சிகளும் எதிர்பார்த்த வெற்றியை அடையவில்லை என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

உணவகம் உள்ளிட்ட துறைகளில் வேலை செய்ய உள்நாட்டினர் அவ்வளவாக





ஆர்வம் காட்டுவதில்லை என்ற உண்மையையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்தான் பல்வேறு தொழில்துறையினர் இன்று உள்ளனர்.

### வேறு வழியில்லை

அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் விஷயத்தில் அரசாங்கம் விதித்திருக்கும் கடுமையான நிபந்தனைகளும் விதிமுறைகளும் நீடிக்கின்ற காரணத்தினால் ஏராளமானோர் ஒரு கடைசி நடவடிக்கையாக சட்டவிரோத அந்நியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டிய ஒரு கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளனர் என்று மலேசிய வேலை வாய்ப்பு ஏஜென்சிகள் சங்கத்தின் (பபா)தலைவர் டத்தோ ஃபூ யோங் ஹூங் கூறியதாக என்எஸ்டி செய்தி வெளியிட்டது.

தொடர்ச்சி பக்கம் 13